
பாடம் 8 பிப்ரவரி 21, 2026






# கிறிஸ்துவின் பிரதானத்தன்மை



“அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.” கொலோசெயர் 1:15-17

இயேசு முழு பிரபஞ்சத்திற்கும் அமைதியை கொண்டு வந்தார் என்று பவுல் அறிவிக்கிறார் “...பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும்...” (கொலோ. 1:20).

இந்த கூற்றுக்கு வருவதற்குமுன், இயேசு உண்மையில் யார் என்பதை அப்போஸ்தலன் நமக்கு சொல்கிறார். அவர் ஒரு சிறந்த போதகரோ, தத்துவ ஞானியோ, தீர்க்கதரிசியா, பிரசங்கியோ, நற்செய்தியின் தூதரோ அல்ல.



இயேசு கிறிஸ்து...



- தேவனுடைய தற்சுரூபம் (கொலோசெயர் 1:15மு)
- எல்லாவற்றிற்கும் முந்தினவர் (கொலோ 1:15பி-17)
- சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் (கொலோசெயர் 1:18மு)
- அவரே ஆதியும்... (கொலோசெயர் 1:18பி)
- ஒப்புரவாக்குபவர் (கொலோசெயர் 1:19-20)

# தேவனுடைய தற்சுரூபம்

"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும்,"
(கொலோசெயர் 1:15மு)





ஒரு படம் யதார்த்தத்தின் நகலாக இருக்கலாம் (ஒரு புகைப்படம், முப்பரிமாண படிமம், சிலை), அல்லது கற்பனையான ஒன்று(வரைபடம்). ஆனால் விவிலியத்தின் உருவக் கருத்து அதற்கு அப்பாற்ப்பட்டது.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் தனது சாயலில் படைத்தார் (அதி. 1:27), ஆதாம் தனது சாயலில் ஒரு மகனை பெற்றெடுத்தார்(ஆதி. 5:3).இவை யதார்த்தத்தின் பிரதிகள், போலிகள், அல்லது அவர்களின் கற்பனையின் உருவங்கள் அல்ல. அவை உடல், உளவியல், மற்றும் சமூக ஒற்றுமைகள்...



சடங்காச்சார பிரமாணம் ஒரு நிழலாக இருந்தது, "பொருட்களாக சாயலாக அல்ல" (எபி. 10:1) என்று பவுல் கூறுகிறார், இது "உருவம் = யதார்த்தம்" என்பதைக் குறிக்கிறது.

கேள்வி என்னவென்றால்: இயேசு தேவனைப் போலவே இருந்தாரா, அல்லது தேவனுக்கு சமமாக இருந்தாரா? "நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்", என்ற தெய்வீக பெயரை திரும்ப திரும்ப தனக்கு காரணம் காட்டிக் கொண்டதோடு, இயேசு வெளிப்படையாகவே கூறுகிறார்: "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவான் 10:30); "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்;" (யோவான் 14:9).





# எல்லாவற்றிற்கும் முந்தினவர்

"அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது." (கொலோசெயர் 1:17)







"முந்தினவர்" என்றால் முதற்பேறானவர் என்று பொருள். ஆகவே, தேவனால் முதல் உருவாக்கப்பட்டவர் இயேசு என்று சிலர் கற்பிக்கின்றனர் (கொலோ. 1:15). ஆனால், "உருவம்" என்ற வார்த்தையைப் போலவே, "முதற்பேறானவர்" என்ற வார்த்தையும் ஒரு பரந்த வேதாகம அர்த்தத்தை கொண்டுள்ளது.

இஸ்மவேலுக்கு பதிலாக ஈசாக்கு முதற்பேறானவர்; ஏசாவுக்கு பதிலாக யாக்கோபு முதற்பேறானவர்; ரூபனுக்கு பதிலாக யோசேப்பு முதற்பேறானவர்; எலியாபுக்கு பதிலாக தாவீது முதற்பேறானவர் (சங்கீதம் 89:27). அவர்கள் அனைவரும் முதற்பேறானவர்கள், அவர்கள் முதலில் பிறந்ததால் அல்ல, தங்கள் சகோதரர்களை விட முதன்மையான இடத்தை பிடித்ததால்.

கொலோசெயரில் பவுல் இந்த முக்கியத்துவத்தை குறிப்பிடுகிறார். அவருடைய இயல்பை பற்றிய எந்த சந்தேகத்தையும் தவிர்க்க, அவர் அவருக்கு இரண்டு தெய்வீக குணங்களை கூறுகிறார்:இருக்கும் அனைத்தையும் சிருஷ்டித்தார் (கொலோ. 1:16; ஏசா. 45:18); அவைகள் அனைத்தையும் பாதுகாக்கிறார்(கொலோ. 1:17; சங். 119:91).




# சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்;

“அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்;” (கொலோசெயர் 1:18மு)





சில மொழிகளில் (காட்டலான் மற்றும் ஆங்கிலம்) “தலை” என்ற வார்த்தை “தலைமை” அல்லது “முதல்வர்” என்று மொழிபெயர்க்கப்படும், ஏனென்றால் அதுதான் “தலை” என்ற வார்த்தையின் உருவக அர்த்தம். எபிரேய மொழியிலும் இதுவே உண்மை. உதாரணமாக, “தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி” (ஓசியா. 1:11) என்பது “அவர்கள் ஒரு தலைவரை நியமித்தார்கள்” என்று மொழிபெயர்க்கப்படும்.

பவுல் இந்த வார்த்தையை கிறிஸ்துவுக்கு பயன்படுத்தும்போது, அந்த அர்த்தத்தில் தான் பயன்படுத்துகிறார் (கொலோ. 1:18மு).



ஆனால் பவுல் சரீரத்திற்கு ஒரு உருவக அர்த்தத்தையும் சேர்க்கிறார். கிறிஸ்து தலையாக இருந்தால், நாம்—சபை—சரீரம். இந்த கருத்திலிருந்து அது பின்வருமாறு:



நாமெல்லாரும் தேவை (1 கொரி. 12:15)



ஒவ்வொருவருக்கும் அவரவர் சொந்த வேலை உண்டு(1 கொரி. 12:17)



நாம் யாரையும் வெறுக்க முடியாது(1 கொரி. 12:21)



“தாழ்ந்த” விசுவாசிகள் என்று யாரும் இல்லை(1 கொரி. 12:22-24)



நாம் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ள வேண்டும்(1 கொரி. 12:25-26)

# அவரே ஆதியும் ...

"எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோசெயர் 1:18பி)

"ஆதி" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை *ஆர்கி* (*ἀρχή*), என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது, தொடக்கம், தோற்றம், முதல் காரணம் அல்லது கொள்கை என்று பொருள்படும், ஆனால் ஆட்சியாளர், வல்லமை, அதிகாரம் அல்லது முதன்மை என்றும் பொருள்படும், இது பெரும்பாலும் சூழலை பொறுத்தது.

கிறிஸ்துவுக்கு பயன்படுத்தப்படும் இந்த வார்த்தைக்கு இந்த அர்த்தங்கள் அனைத்தும் இருக்கலாம் என்று நாம் கூறலாம் (கொலோ. 1:18). இயேசுவே எல்லாவற்றின் தோற்றமும் [தேவனுடைய தற்சுரூபமும்], அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டதற்கான காரணமும் [சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்], உச்சபட்ச ஆட்சியாளர் [தலை]. இவை அனைத்தும் அவருக்கு முன்னுரிமை அளிக்கின்றன.

பவுல் இங்கே "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" என்ற பட்டத்தை சொருகுகிறார் (உயிர்தெழுப்பப்பட்ட முதல் நபர் இயேசு அல்ல, ஆனால் மோசே). மரணத்தின் மீதான அவரது வெற்றி, பாவத்தின் மீதான அவரது வெற்றியையும், அவரது சாயலில் நம்மை மீண்டும் உருவாக்குவதற்கான அவரது வல்லமையையும் குறிக்கிறது.



# ஒப்புரவாக்குபவர்

“அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.” (கொலோசெயர் 1:20)



இயேசு செய்த காரியம் எல்லாவற்றிலும் அவரை முதலிடத்தில் கொண்டு வந்தது. பவுலின் கூற்றுப்படி, கிறிஸ்து இந்த எல்லா பட்டங்களுக்கும் தகுதியானவர் “சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,” (கொலோசெயர் 1:19). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இயேசு முழுமையாக தேவனாகவும் முழுமையாக மனிதராகவும் இருந்தார். “அவருடைய மகிமையைக் கண்டோம்;, [...] கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்,” (யோவான் 1:14).

சிலுவையில் மரித்து மீண்டும் உயிர்தெழுந்ததன் மூலம், மனிதகுலத்தை தேவனுடன் ஒப்புரவாக்க தேவையான அனைத்தையும் இயேசு பூர்த்தி செய்தார் (கொலோ. 1:20).

அவர் “பூமியிலுள்ளவைகளை” தேவனிடம் ஒப்புரவாக்கிவிட்டார் என்பதை நாம் எப்படி புரிந்துகொள்ள முடியும்? ஆனால் பரலோகத்தில் இருப்பவர்களை அவர் எவ்வாறு தம்மிடம் ஒப்புரவாக்கி கொண்டார்?



முழு பிரபஞ்சமும் தீமையின் தன்மையை தெளிவாக காண முடிந்தது. இதனால், தேவனுடைய தன்மை பரலோகத்திலும் பூலோகத்திலும் நிருபிக்கப்படுகிறது.